**රාජ්‍ය පරිපාලන, පළාත් සභා සහ පළාත් පාලන අමාත්‍යාංශය**

**பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

**Ministry of Public Administration, Provincial Councils and Local Government**

**නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| දුරකතනය<br>தொலைபேசி:<br>Telephone | **011-2696211-13**<br>**011-2166000** | ෆැක්ස්<br>தொலைநகல்:<br>Fax | **011- 2695279** | ඊ- මේල්<br>மின்னஞ்சல்:<br>E-mail | **info@pubad.gov.lk** | වෙබ් අඩවිය<br>இணையத்தளம்:<br>Web Site | **www.pubad.gov.lk** |


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | MPA/PSD/SP PRO/2026-P2 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி<br>Date | 2026.07.24 |

அமைச்சுக்களின் செயலாளர்கள்

மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்

ஆணைக்குழுச் செயலாளர்கள்

மாவட்ட செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள்

திணைக்களத் தலைவர்கள்

**<u>இலங்கை திட்டமிடல் சேவை தரம் I உத்தியோகத்தர்களை விசேட தரத்திற்கு தரமுயர்த்துதல்</u>**

1670/32 ஆம் இலக்க 2010.09.10 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை திட்டமிடல் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கான 2196/42 ஆம் இலக்க 2020.10.08 ஆம் திகதிய திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்க 2026.07.01 ஆம் திகதியில் இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக, தகுதி பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோருவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

02. அதற்கிணங்க இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்தில் 2026.07.01 ஆம் திகதியில் நிலவும் ஐந்து (05) வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரி, தகைமை பெற்றுள்ள உத்தியோகத்தர்களில் சேவை மூப்புப் பட்டியலின் ஒழுங்குமுறைப்படி வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு உத்தியோகத்தர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதற்கு இத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.

03. விசேட தரத்திற்கு தரமுயர்வு பெறுவதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனமொன்றில் பின்வரும் பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்துக்குரிய பாடத்துறையில் முதுமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல். இந்த முதுமானிப் பட்டத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருட ஆய்வுச் செயற்பாடுகள் உள்ளடங்குதல் வேண்டும்.

(அ) அபிவிருத்தி திட்டமிடல் / அபிவிருத்திக் கல்வி / கருத்திட்ட திட்டமிடல் / கருத்திட்ட முகாமைத்துவம்

(ஆ) பொருளாதாரம் / பொருளாதார அளவியல் / நிதிப் பொருளாதாரம் / அபிவிருத்திப் பொருளாதாரம்

(இ) வர்த்தகம் / நிதி முகாமைத்துவம்

(ஈ) சமூக விஞ்ஞானம் / சமூகப் பணி / சமூக அபிவிருத்தி /கல்வி / போஷனை / சுகாதாரம்

(உ) கணிதம் / புள்ளிவிபரங்கள் / புள்ளிவிபர ரீதியான தொழில்நுட்ப முறைமைகளும் புள்ளிவிபர ரீதியான ஆய்வும்

(ஊ) விவசாயம் / விலங்கு வளர்ப்பு / சூழலியல் / விவசாயப் பொருளாதாரம்

(எ) தகவல் தொழில்நுட்பம் / கணனி விஞ்ஞானம் / முகாமைத்துவ தகவல் முறைமைகள் (MIS)

(ஏ) புவியியல் / பிரதேச அபிவிருத்தி / நகர அபிவிருத்தி / நகர மற்றும் பிரதேச திட்டமிடல் / புவியியல் தகவல் தொகுதி / சனத்தொகையியல் / சனத்தொகைக் கல்வி

(ஐ) மனித வளங்களின் முகாமைத்துவம் / விற்பனை முகாமைத்துவம் / தொடர்பாடல்

(ஒ) பௌதிகத் திட்டமிடல் / போக்குவரத்து திட்டமிடல் / நகர மற்றும் கிராமிய திட்டமிடல் / கைத்தொழில் முகாமைத்துவம்

(ஓ) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் வேறொரு பாடத்துறை

II. தரமுயர்த்துவதற்கான தகைமைகள் பரீட்சிக்கும் திகதியில் சேவையின் முதலாம் தரத்தில் ஐந்து (05) வருடங்கள் செயலூக்கமானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் முதலாம் தரத்துக்கு தரமுயர்த்தப்பட்டதன் பின்னர் ஐந்து (05) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தலும்.

III. தரமுயர்த்துவதற்கான தகைமைகளை பரீட்சிக்கும் தினத்திற்கு சேவையில் பதினெட்டு (18) வருடங்களுக்குக் குறையாத முனைப்பான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் 2026.07.01 ஆந் திகதிக்கு முனைப்பான சேவையில் ஈடுபட்ட உத்தியோகத்தவராகவிருத்தல்.

IV. தரமுயர்த்துவதற்கான தகைமைகளைப் பரீட்சிக்கும் தினத்திற்கு உடன் முந்திய ஐந்து (05) வருடங்களில் வருடாந்த செயலாற்றுகை திருப்திகரமானதாக அல்லது உயர் மட்டத்தில் காணப்படுதல்.

V. தரமுயர்த்துவதற்கான தகைமைகள் பரீட்சிக்கப்படும் திகதியில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இசைவான முறையில் ஒழுக்காற்றுத் தண்டனை எதனையும் பெற்றிராதிருத்தல்.

VI. மூன்றாம் வினைத்திறன் தடை தாண்டலை உரிய திகதியில் பூர்த்தி செய்திருத்தல்.

04. தரமுயர்த்தல் திட்டம்

4.1 சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு 2196/42 ஆம் இலக்கத்தையும் 2020.10.08 ஆம் திகதியையும் கொண்டதாகச் செய்யப்பட்ட 5 ஆவது பிரமாணக் குறிப்பு திருத்தத்திற்கு இணங்க அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் ஊடாக 2026.07.01 ஆம் திகதியில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இருமடங்குக்கு மேற்படாத எண்ணிக்கை விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி விசேட தரத்திற்கு நியமிப்பதற்கான சிபாரிசுகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படும்.

4.2 அதனடிப்படையில், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால், நேர்முகப் பரீட்சைச் சபையினால் சமர்ப்பிக்கப்படும் சிபாரிசுகளின் அடிப்படையில், தரம் I இலுள்ள உத்தியோகத்தர்களின் சேவை மூப்பின் தொடர் ஒழுங்கிற்கு ஏற்ப 2026.07.01 ஆம் திகதியில் விசேட தரத்தில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கை உத்தியோகத்தர்கள் விசேட தரத்திற்கு தரமுயர்த்தப்படுவர்.

05. விசேட தரத்துக்கு தரமுயர்த்தப்படும் உத்தியோகத்தர்கள் விசேட தரத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியொன்றுக்கு நியமிக்கப்பட்ட பின்னர் அந்நியமனம் பெற்ற திகதி முதல் 22 வேலை நாட்களுக்குள் புதிய பதவியில் கடமையைப் பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோடு அவ்வாறு கடமைக்கு 22 வேலை நாட்களுக்குள் அறிக்கை செய்யாத உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட விசேட தரத்தின் பதவி உயர்வு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் ஏற்பாடுகளின் படி ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

06. 2026.07.01 ஆம் திகதியில் நிலவும் வெற்றிடங்களுக்கு தரமுயர்த்தப்படுவதனால் அத்திகதியில் முனைப்பான சேவையில் இருந்த தகைமை பெறும் உத்தியோகத்தர்கள் தங்களால் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாணங்களின் பிரதம செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஊடாக எனக்கு **2026.08.07** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்ப வேண்டும். அத்தினத்திற்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எந்தவொரு காரணத்திற்காகவும் பொறுப்பேற்கப்பட மாட்டாது என்பதுடன் குறைபாடுகள் உள்ள மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

07. 2026.07.01 ஆம் திகதிக்கு மேற்படி அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் மாத்திரம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கும்படி குறித்த உத்தியோகத்தர்களை அறிவுறுத்துமாறு தெரிவிப்பதோடு மேலே பந்தி 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள, முந்தைய பதவி உயர்வுச்

சந்தர்ப்பத்தில் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய போதிலும் பதவி உயர்வு கிடைக்காத அல்லது விண்ணப்பிக்க முடியாது போன உத்தியோகத்தர்களும் இந்தப் பதவி உயர்வுக்காக விண்ணப்பிக்கலாம்.

08. மேலும், 2026.01.01 ஆம் திகதியில் இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்திற்கு பதவி உயர்த்துவதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள உத்தியோகத்தர்களால், இந்த அறிவிப்பின்படி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது, விண்ணப்பத்துடன் பூர்த்தி செய்யப்பட்ட இறுதி சம்பள உயர்வை நிரூபிப்பதற்கு உரிய ஆவணங்களை மட்டும் சமர்ப்பித்தால் போதுமானது.

09. இது தொடர்பில் உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டுவது சிறந்தது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்,

ஒப்பம்./ எஸ்.ஆலோக்கபண்டார

செயலாளர்

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி : 0112 688124

தொலைநகல் : 0112 691690

மின்னஞ்சல் முகவரி : d.psd.pubad@gmail.com

**இலங்கை திட்டமிடல் சேவை தரம் I உத்தியோகத்தர்களை விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கான விண்ணப்பம்**

**அலுவலகப் பயன்பாட்டுக்காக**

**விண்ணப்ப இலக்கம்**

| S |
|---|
| F |

(அ) பகுதி - உத்தியோகத்தரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

1. பெயர் -

   1.1 முழுப் பெயர்: திரு/திருமதி/செல்வி.............................................................................................

   1.2 நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் :- ...........................................................

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் : .........................................................................................

3. பிறந்த திகதி: ........................................................................................................................

4. தனிப்பட்ட முகவரி: ................................................................................................................

5. தொலைபேசி இலக்கம் - 5.1 வீட்டு : ............................ 5.2 செல்பேசி : ........................

6. பதவி : ........................................................................................................................

7. அமைச்சு/ திணைக்களம் : ..........................................................................................

8. அலுவலக முகவரி : ...............................................................................................

9. 9.1 அலுவலக தொலைபேசி இலக்கம் : ..............................................................

   9.2 அலுவலக தொலைநகல் இலக்கம் : ..............................................................

10. நியமன / தரமுயர்வுத் திகதி -

   10.1 இ.தி.சே. தரம் III இற்கு நியமனத் திகதி : .............................

   10.2 இ.தி.சே. தரம் II இற்கு தரமுயர்வுத் திகதி : ................................

   10.3 இ.தி.சே. தரம் I இற்கு தரமுயர்வுத் திகதி : ....................................

(தரம் I இற்கு தரமுயர்த்தப்பட்ட கடிதத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை 10.3 என இலக்கமிட்டு இணைத்து அனுப்ப வேண்டும்)

11. தரம் I இற்கு தரமுயர்வு பெற்ற பின்னர் சேவையில் இல்லாத காலப் பகுதிகள் மற்றும் ஒழுக்காற்றுத் தண்டனைகள் விதிக்கப்படுதல் மூலம் சேவைக் காலம் குறைவடைதல் -

11.1 லீவு பெற்றமையின் அடிப்படையில் சேவைக் காலம் குறைவடைதல் (பொருத்தமாயின் மாத்திரம் பூர்த்தி செய்யவும்)

| தொடர் இலக்கம் | லீவு அனுமதிக்கான நிபந்தனைகள் | காலப் பகுதி | | சேவைக் காலம் குறைக்கப்படும் நாட்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | | முதல் | வரை | வருடங்கள்: | மாதங்கள் | நாட்கள் |
| i | தாபனவிதிக் கோவையின் V:2.5.4 | | | | | |
| ii | தாபனவிதிக் கோவையின் XII:16 | | | | | |
| iii | 10 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை | | | | | |
| iv | 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை | | | | | |
| v | தாபனவிதிக் கோவையின் XII:36 | | | | | |
| vi | ஏனைய சம்பளமற்ற லீவுகள் | | | | | |
| vii | அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 14/2022 இன்படி சம்பளமற்ற உள்நாட்டு/வெளிநாட்டு விடுப்பு | | | | | |
| சேவைக் காலம் குறைவடையும் மொத்த நாட்களின் எண்ணிக்கை | | | | | | |

(லீவுகளுக்கு அனுமதி வழங்கிய கடிதங்ளின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை 11.1.i, 11.1.ii, 11.1.iii என விடயத்துடன் தொடர்புடைய வகையில் இலக்கமிட்டு இணைக்க வேண்டும்.)

11.2 ஒழுக்காற்று விடயங்களின் அடிப்படையில் சேவைக் காலம் குறைவடைதல் (பொருத்தமாயின் மாத்திரம் பூர்த்தி செய்யவும்)

| ஒழுக்காற்றுத் தீர்மானம் | குற்றப் பத்திரத்திற்கு இணங்க குற்றம் நிகழ்ந்த காலப் பகுதி | சேவைக் காலம் குறைக்கப்படும் நாட்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | வருடங்கள்: | மாதங்கள் | நாட்கள் |
| I. ....................சம்பள ஏற்றங்களைப் பிற்போடுதல் | | | | |
| II. ஏனையவை | | | | |
| சேவைக் காலம் குறைவடையும் மொத்த நாட்களின் எண்ணிக்கை | | | | |

(ஒழுக்காற்றுத் தீர்மானங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை 11.2.i, 11.2.ii என விடயத்துடன் தொடர்புடைய வகையில் இலக்கமிட்டு இணைக்க வேண்டும்.)

11.3 11.1 மற்றும் 11.2 இன் இறுதிக் கூட்டுத் தொகை :. ............... வருடங்கள் ............... மாதங்கள் ................. நாட்கள்

11.4 தரம் I இற்கு நியமனம் பெற்ற திகதியிலிருந்து முன்னோக்கி மேலே 11.3 இலுள்ள காலப் பகுதியை அகற்றிய பின்னர் திகதி : ..................................

12. உடன் முந்திய 05 வருடங்களில் சம்பள ஏற்றங்களை பெற்றிருத்தல்.

12.1 தரமுயர்வு பெறுவதற்கு தகைமை பெறும் 2026.07.01 ஆம் திகதிக்கு உடன் முந்திய 05 வருடங்களில் அனைத்துச் சம்பள ஏற்றங்களையும்** உழைத்துள்ளார்/உழைக்கவில்லை.*

(தாபனவிதிக் கோவையின் XII:16:9, XII:16:10 மற்றும் XII:36:1:4(i) மற்றும் (ii) ஆகிய பிரிவுகளின் கீழ் பெற்றுள்ள சம்பள ஏற்றங்கள் தரமுயர்வுக்காக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.)

*(பொருத்தமற்ற சொற்களை வெட்டிவிடவும்)

12.2 தரமுயர்வு பெறுவதற்கு தகைமை பெறும் 2026.07.01 ஆம் திகதிக்கு உடன் முந்திய 05 வருடங்களில் சம்பள ஏற்றங்கள் பெற்றிராவிடின், 05 சம்பள ஏற்றங்கள் பெறும் திகதி வரையில் தரமுயர்வுக்குத் தகுதிபெறும் திகதியை மீளக் கணக்கிட வேண்டும். அதனடிப்படையில் தகுதி பெறும் திகதி** : ....................

**(சம்பள ஏற்றப் படிவங்கள் ஐந்தினதும் (05) சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை 12.1 முதல் 12.5 வரை இலக்கமிட்டு இணைக்கவும்)

13. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்கச் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க ஒழுக்காற்றுத் தண்டனைகள் விதிக்கப்பெற்று /விதிக்கப்பெறாது இருத்தல்

13.1 கோவைக்கு இணங்க, தரமுயர்வுக்குத் தகுதி பெறும் 2026.07.01 ஆம் திகதிக்கு உடன் முந்திய 05 வருடங்களில் எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்படாதவராக இருத்தல். (திணைக்களத் தலைவர் இது தொடர்பில் எழுத்துமூலமான பிரகடனமொன்றின் மூலம் சான்றுப்படுத்துவது அவசியமாகும் - விண்ணப்பத்தின் "ஆ" பகுதியின் கீழ்)

13.2 13.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதியினுள் ஒழுக்காற்றுத் தண்டனையொன்றுக்கு ஆளாகியுள்ள அதேவேளை 11.2 இன் கீழ் குறிப்பிடப்பட்டு, அதற்கிணங்க தரமுயர்வுத் திகதி திருத்தப்படுமாயின் அத்திகதி: ..............................

13.3 தரமுயர்வுக்கு தகுதி பெறும் திகதி 12.2 மற்றும் 13.2 இற்கு இணங்க திருத்தப்படுமாயின் புதிய திருத்தப்பட்ட திகதி : ...........................

14. உடன் முந்திய ஐந்து (05) வருடங்களில் வருடாந்த செயலாற்றுகை தரங்கணிப்புக்கு இணங்க வேலை நடத்தை சிறந்ததாகப் பிரதிபலித்தல்.
மேலே 12 அல்லது 13 இணங்க தகுதி பெறும் திகதிக்குரிய வருடத்திற்கு உடன் முந்திய 05 வருடங்களை பின்வரும் அட்டவணையின் முதலாம் நிரலில் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த 05 செயலாற்றுகை அறிக்கைகளினதும் சான்றுப்படுத்திய பிரதிகளை இணைத்தல் வேண்டும். செயலாற்றுகை அறிக்கையின் இறுதி மதிப்பீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட மாற்று சிபாரிசுகள் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் குறித்த உத்தியோகத்தரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை பதிக்கப்படாத அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

| வருடம் | இறுதி மதிப்பீடு<br>மிகச் சிறப்பானது/ சாதாரண மட்டத்தை விட உயர்வானது/ திருப்திகரமானது/ திருப்தியற்றது | குறித்த உத்தியோகத்தர் கையொப்பமிட்டுள்ளார்/ கையொப்பமிடவில்லை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

ஒவ்வொரு வருடத்திற்குமான செயலாற்றுகை அறிக்கைக்கு இணங்க ஒவ்வொரு வரியும் நிரலும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

15. சேவை பிரமாணக் குறிப்பின் 10.3.1 (i) இலுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்

| 15.1<br>தொடர் இலக்கம் | 15.2<br>முதுமானிப் பட்டத்தின் பெயர் | 15.3<br>பாடத் துறை | 15.4<br>அந்தப் பட்டத்தை வழங்கும் பல்கலைக் கழகம் / அங்கீகரிக் கப்பட்ட கல்வி நிறுவனம் | 15.5<br>அந்த பல்கலைக்கழகம் அல்லது கல்வி நிறுவனம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பது | 15.6<br>பட்டக் காலப் பகுதி (ஆரம்பித்த மற்றும் முடிவடைந்த திகதி) | 15.7<br>பட்டம் செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| 4. | | | | | | |
| 5. | | | | | | |

(15.1 ஆக இலக்கமிட்டு பட்டச் சான்றிதழினதும் விரிவான பெறுபேற்றுக் குறிப்பினதும் சான்றுப்படுத்திய பிரதிகளை இணைத்தல் வேண்டும்.)

16. தரமுயர்வு பெறுவதற்கு தகைமை பெறும் 2026.07.01 ஆம் திகதியில் சேவையில் பதினெட்டு (18) வருடங்களுக்குக் குறையாத செயலூக்கமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார்/ செய்யவில்லை.*

17. மூன்றாம் (03) வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை

17.1 பூர்த்தி செய்ய வேண்டிய திகதி : ......................................

17.2 பூர்த்தி செய்த திகதி : ......................................

(17 ஆக இலக்கமிட்டு குறித்த சான்றிதழினது சான்றுப்படுத்திய பிரதியை இணைத்தல் வேண்டும்.)

மேலே 01 முதல் 17 வரையான இலக்கங்களுக்கு சரியானதும் முழுமையானதுமான தகவல்களைக் கொண்ட விண்ணப்பத்தையும் இணைத்து அனுப்புமாறு குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களினதும் சான்றுப்படுத்திய பிரதிகளையும் விடயத்துடன் தொடர்புடைய இலக்கங்களை ஒவ்வொரு ஆவணத்தினதும் வலது பக்க மேல் மூலையில் எழுதி இலக்க ஒழுங்கின் படி இணைத்து ஒரு கோவையாகத் தயாரித்து இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

மேலும், என்னால் தரமுயர்வின் அடிப்படையில் நியமனம் பெறுவதற்குக் கோரியுள்ள இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்திற்குரிய பதவி வெற்றிடமாகக் காணப்படும் எந்தவொரு சேவை நிலையத்திற்கும்/அந்நிலையங்களுக்கு மிகவும் அருகிலுள்ள இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்திற்குரிய பதவியொன்றுக்கு நியமனம் பெறுவதற்கு விருப்பத்தை வெளிப்படுத்துகிறேன்.

22 வேலை நாட்களுக்குள் அந்தப் பதவியை பொறுப்பேற்கத் தவறினால், தரமுயர்த்தப்பட முன்னர் இருந்த தரத்திற்கும் பதவிக்கும் திருப்பி அனுப்பப்படுவதற்கு இத்தால் விருப்பத்தை வெளிப்படுத்துகிறேன்.

திகதி : ............................ ...........................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்
பதவிப் பெயர் மற்றும் பதவி முத்திரை

பகுதி (ஆ) - திணைக்களத் தலைவரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டும். (விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக திணைக்களத் தலைவர்கள் தனிப்பட்ட வகையில் பொறுப்புக் கூறுதல் வேண்டும்)

செயலாளர்,
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு / உரிய அமைச்சு

1. உத்தியோகத்தரால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் சரியானவையாகும்.

2. 11, 12 மற்றும் 13 ஆம் இலக்கங்களுக்குரிய விடயங்கள் கோவையுடன் ஒப்புநோக்கப்பட்டன. குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சரியானவை என்றும் அனைத்து தகவல்களும் முழுமையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் அனைத்து ஆவணங்களினதும் சான்றுப்படுத்திய பிரதிகள் இணைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

3. உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அல்லது ஒழுக்காற்று விசாரணை நடைபெற்று வருகின்றன / நடைபெறவில்லை.

   3.1 மேலே பதில் “நடைபெற்று வருகின்றன” என்றிருப்பின் குற்றமிழைத்த திகதி : ....................

   3.2 ஒழுக்காற்று அதிகாரியினால் குற்றப்பத்திரம் வழங்கப்பட்ட திகதி : ...............................

4. திரு/திருமதி/செல்வி ........................................................................................ என்பவரின் பணிக் கடமைகள், வருகை மற்றும் நடத்தை திருப்திகரமானது. அவருடைய செயலாற்றுகையை, தலைமைத்துவத்தை, ஆற்றலை மற்றும் அடுத்த தரமுயர்வுக்குரிய பதவியையும் பொறுப்புக்களையும் வகிப்பதற்கான ஆற்றலை கவனத்தில் எடுத்தேன். அவரை இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கு சிபாரிசு செய்கிறேன்/ செய்யவில்லை.

5. சரியாக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தையும், ஒவ்வொரு விடயத்துடனும் தொடர்புடைய இலக்கங்களைக் குறித்து, இலக்க ஒழுங்குமுறைப்படி உரிய ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளையும் இணைத்துத் தயாரிக்கப்பட்ட கோவையை இத்துடன் அனுப்புகிறேன்.

திகதி : ................................

......................................................
திணைக்களத் / நிறுவனத் தலைவரின்
கையொப்பம், பதவிப் பெயர்
மற்றும் பதவி முத்திரை

குறிப்பு: தேவையற்ற சொற்களை வெட்டி விடவும்.

பகுதி (இ) - உரிய அமைச்சின் செயலாளரினால் அல்லது மாகாண பிரதம செயலாளரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

செயலாளர்,
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு / உரிய அமைச்சு

1. இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் I இலுள்ள திரு/திருமதி/செல்வி ........................................................................................ என்பவரின் கடமைகள் மற்றும் நடத்தை தொடர்பில் திணைக்கள/ நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடன் உடன்படுகின்றேன்/ உடன்படவில்லை.

2. உத்தியோகத்தரின் கடமைகள், நடத்தை, விசேட திறமைகள் மற்றும் செயலாற்றுகை என்பவற்றை மதிப்பீட்டுக்கு உட்படுத்தினேன்.
   திரு/திருமதி/செல்வி ........................................................................................ என்பவரை 2026.07.01 ஆம் திகதி முதல் இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கு சிபாரிசு செய்கிறேன்./செய்யவில்லை.*
   (* சிபாரிசு செய்யாவிட்டால், காரணத்தைச் சுருக்கமாகக் குறிப்பிடவும்.)
   ..........................................................................................................................................
   ..........................................................................................................................................

3. சரியாக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தையும், ஒவ்வொரு விடயத்துடனும் தொடர்புடைய இலக்கங்களைக் குறித்து, இலக்க ஒழுங்குமுறைப்படி உரிய ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளையும் இணைத்துத் தயாரிக்கப்பட்ட கோவையை இத்துடன் அனுப்புகிறேன்.

திகதி : ................................

…..........................................................
அமைச்சின் செயலாளர் மாகாண பிரதம
செயலாளரது ஒப்பம் மற்றும்
பதவி முத்திரை